20th January 1961]

* 16 *Q.*—SRI N. R. THIAGARAJAN : *கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் மதுரை ஜில்லாவிற்குறிய திட்டங்களான கொடுவிலார்பட்டி, வல்லநதி, லக்ஷிமிபுரம், கோடங்கிபட்டி, ராப்பன்பட்டி, நாராயணதேவன்பட்டி முதலிய ஊர்களில் பிரசவ விடுதிகள் திறப்பது ஏன் நடைபெறவில்லை ?

(இ) அவைகள் 1961-ம் வருடம் மார்ச் 31-க்குள்ளாவது திறக்கப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) The Government have opened 45 maternity and child welfare centres in 45 select villages in Madurai district as programmed for Second Plan. Cullapuram and Narayanadevanpatti are two of these 45 villages. The other villages mentioned have not been provided with a separate centre each. They will however be served by the nearest centre available.

(இ) Does not arise.

Irrigation facilities

* 17 *Q.*—SRI A. VEDARATHNAM: *கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) தஞ்சை ஜில்லாவில் நடைபெறும் போர்டு பவுன்டேஷன் பாக்கேஜ் டீல் மூலம் அந்த ஜில்லாவில் பாசன வசதி இல்லாத பகுதிகளுக்கு பாசன வசதியை விஸ்தரிக்கும் வேலை மேற்கொள்ளப்படுமா ?

(இ) அப்படியானல், அதன் விவரமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) & (இ) : Yes, Sir. Irrigation facilities will be extended by implementing schemes like sinking of filter point wells and drilling bore-wells on ryots' lands wherever feasible.

SRI A. VEDARATHNAM : *இப்போது அரசாங்கத்தினுடைய ஆலோசனையில் இருந்து வருகிற லிப்ட் இர்ரிகேஷன் விஷயத்தில் இந்த போர்ட் பவுண்டேஷன்—ஏதாவது அக்கறை எடுத்துக் கொண்டு அந்த சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை மேல்நடத்த முன்வருமா ?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : *இது தீவிர சாகுபடி திட்டத்தின் கீழ் ஆங்காங்கே அமுலுக்கு வந்திருக்கிறது. லிப்ட் இர்ரிகேஷன் ஸ்கீம், போர் வெல் ஸ்கீம்—இப்படி அதிகமாக எடுத்து நடத்த வேண்டும் என்றுதான் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.*

[20th January 1961

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Sir, is there any proposal to extend the scheme to other districts?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: If the hon. Member refers to the package scheme, I may inform him that there is no proposal to extend the scheme to other districts.

SRI A. VEDARATHNAM: இப்போது திருத்துறைப்பூண்டி தாலூகாவில் இந்தத் திட்டம் அமுலில் இருக்கிறது. அங்கே உள்ள லிப்ட் இர்ரிகேஷன் இந்தத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படுமா? எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிய விரும்புகிறேன்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: குறிப்பாக லிப்ட் இர்ரிகேஷன் திட்டம் எங்கு எங்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதற்குத் தனியாகக் கேள்வி கேட்டால் சொல்கிறேன்.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN: தீவிரச் சாகுபடி திட்டம் அமுலில் இருக்கக்கூடிய பழைய டெல்டா மண்ணியார் பாசன பகுதிகளில் வாய்க்கால்கள் சரிவர மராமத்து செய்யப்படாத காரணமாக பாசன வசதி தடைபடுவதனால் சிறிய நீர்ப் பாசனத் திட்டங்களின் கீழ் அவற்றை பராமரிக்கும் வேலைகளை உடனடியாக தொடங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இது எல்லாம் இப்போது கவனிக்கப்பட்டு வருகிறது.

SRI K. B. S. MANI: இதற்கு முன்னதாக வடிகால்களை எல்லாம் பெரிய மிராசுதார்கள் ரிப்பேர் செய்து வந்தார்கள். நிலப் பிரிவினைக்குப் பிறகு அவர்கள் செய்யாத காரணத்தினால் சிறிய சிறிய மிராசுதார்கள் எல்லாம் கஷ்டப்படும் அளவுக்கு வடிகால்கள் தூர்ந்து போயிருக்கின்றன. இத்தகைய கிராமங்களில் இந்தத் திட்டத்தின் கீழ் வடிகால்களை எல்லாம் அரசாங்கம் மேற்கொண்டு உடனடியாகச் செய்ய ஏற்பாடு செய்யுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: வடிகால்கள் விஷயமாக மராமத்து செய்வதுபற்றியும் ஓரளவு அரசாங்கம் நேரிடையாக மராமத்து இலாகா மூலம் கவனம் செலுத்தி வருகிறது. மற்றது விவசாயிகள் கவனிக்க வேண்டும். இதிலே பெரிய மிராசுதார், சிறிய மிராசுதார் என்று இல்லை. பெரும்பாலும் சிறிய மிராசுதார்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள். எங்கெங்கே பயிரிடுகிற மிராசுதார்கள், விவசாயிகள் கவனம் செலுத்த வேண்டுமோ அங்கங்கே அதைச் செய்யவேண்டும் என்றுதான் எதிர்பார்க்கப்படுகிறது.